மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சை – 2017

# நாடகமும் அரங்கியலும் - I

தரம் - 13 (2017) புள்ளித்திட்டம்

## பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 01) **2** | 11) **2** | 21) **1** | 31) **5** |
| 02) **1** | 12) **4** | 22) **2** | 32) **3** |
| 03) **5** | 13) **3** | 23) **1** | 33) **5** |
| 04) **4** | 14) **2** | 24) **5** | 34) **3** |
| 05) **2** | 15) **1** | 25) **3** | 35) **1** |
| 06) **5** | 16) **2** | 26) **1** | 36) **1** |
| 07) **5** | 17) **5** | 27) **1** | 37) **2** |
| 08) **4** | 18) **1** | 28) **2** | 38) **5** |
| 09) **2** | 19) **4** | 29) **1** | 39) **1** |
| 10) **2** | 20) **2** | 30) **3** | 40) **3** |

(40 புள்ளிகள்)

## பகுதி - II

## பகுதி - A

01) 1) கலைஞனை முதன்மைப்படுத்தி பார்ப்போர் முன்னிலையில் ஆற்றிக் காட்டப்படும் கலைவடிவம்

2) மீளுருவாக்கம் செய்ய முடியாதது.
போலச் செய்தல் காணப்படும்.
கணப்பிரசன்னமானது.
தாக்க - மறுதாக்கக் கலை.
பார்ப்போருடன் ஊடாட்டமுடையது.
பொருத்தமான எவையேனும் நான்கு அம்சங்கள் கூறப்பட்டு விளக்கியிருப்பின் 4 புள்ளிகளையும் வழங்கவும்.

3)

| நாடகம் | சினிமா |
|---|---|
| ✶ அவைக்காற்றுகைக் கலை | ✶ தொழிநுட்பக் கலை |
| ✶ நேரடித் தொடர்பு | ✶ நேரடித் தொடர்பற்றது |
| ✶ பார்ப்போர் துலங்கல் நாடகத்தில் தாக்கம் செலுத்தும் | ✶ பார்ப்போர் துலங்கல் தாக்கம் செலுத்தாது. |
| ✶ காட்சிகள் நேரடியாக நிகழ்த்தப்படும் | ✶ கமரா மூலம் பதிவுக்குட்பட்டே பார்க்கப்படும் |
| ✶ பாத்திரங்களின் முகங்களை அண்மித்துக் காட்ட முடியாது | ✶ பாத்திரங்களின் முகங்களை அண்மித்தும் - தூரவும் காட்டலாம் |
| ✶ நிகழும் கணத்தில் இறந்து விடும் | ✶ களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடியது |

இவ்வாறு வானொலி, தொலைக்காட்சி நாடகங்களுடனும் வேறுபடுத்தியிருப்பின் 5 புள்ளிகளும் அவற்றில் 2 விடயங்களை விளக்கியிருப்பின் 4 புள்ளிகளையும் வழங்கவும்.

02) 1) கவிதையியல்

2) கதைப்பின்னல், சிந்தனை, பாத்திரம், சொல்லாடல், பெருங்காட்சி, இசை
மேற்கூறப்பட்ட பண்புகளைக் கூறியிருப்பின் 3 புள்ளிகளும் விளக்கியிருப்பின் 3 புள்ளிகளும் வழங்குக.

3) தோற்றம்

- ✶ டயோனிசஸ் சடங்கினடியாகத் தோற்றம்.
- ✶ டித்திறாம் பாடல்கள் - றகோடியா - திறஜெடி.
- ✶ பிறப்பிலிருந்து இன்பியலும் இறப்பிலிருந்து துன்பியலும் தோற்றம் பெற்றதென்ற கருத்துமுண்டு.
- ✶ தெஸ்பிஸ் இதன் தோற்றத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

வளர்ச்சி

- ✶ ஏரியன் (*Arion*) தெஸ்பிஸ் நாடகாசிரியர்கள் ஊடாக வளர்ச்சி.
- ✶ ஈஸ்கலஸ், சோபோகிளிஸ், யூரிப்பிடிஸ் இவர்களது நாடகத் தன்மை ஒருவர் நாடகத் தன்மையிலிருந்து ஒருவர் வேறுபடும் விதம்
  - கோரஸ்
  - நடிகர்
  - ஐதிகம்

தோற்றத்திற்கான விளக்கம் - 03 புள்ளிகள்
படிநிலை வளர்ச்சி - 03 புள்ளிகள்
விளக்கியிருப்பின் - 01 புள்ளி

03) 1) படச்சட்ட அரங்கு

- ✶ ஒரு பக்கப் பார்ப்போரை மையமாகக் கொண்டது.
- ✶ ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம் குறைவு.
- ✶ இத்தாலியில் மறுமலர்ச்சி காலத்தில் தோற்றம் பெற்றது.
- ✶ தளம் கற்பனையில் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.
- ✶ படம் வரையப்பட வேண்டும்.
- ✶ புறொசீனியம் அரங்கு என்று சொல்லப்படும்

(மேலும் பொருத்தமான விடைகள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்)

2) வட்டக்களரி

- ✶ ஆடப்படும் அரங்கு வட்டக்களரி
- ✶ சுற்றிவர பார்ப்போரைக் கொண்டது.
- ✶ ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம் அதிகம்.
- ✶ களரியை மையமாகக் கொண்டே ஆட்டக்கோலங்கள் வடிவமைக்கப்படும்.
- ✶ பாத்திரங்கள் திரைபிடித்தே அழைத்து வரப்படுவர்.
- ✶ அண்ணாவியார் பிரதான வகிபாகம் ஏற்பார். சபையோர் காணப்படுவார்.
- ✶ அரங்க அளிக்கை, ஆடல் பாடல், உடை ஒப்பனை, ஒளி - ஒலி, பார்ப்போர் உறவு போன்றன அரங்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
- ✶ படம் வரையப்பட வேண்டும்.

3) அர்ச்சுனன் தபசு

- ✶ கோவில் முன்றலில் - திறந்த வெளியில் மேட்டு நிலத்தில் இடம்பெறும்.
- ✶ 15 அடி நீளம், 15 அடி அகலம் உடைய அரங்கு.
- ✶ தபசு மரம் பெருங்காட்சிப் பண்பு கொண்டது.
- ✶ தபசு மரம் 60 அடி உயரம் கொண்டது.

- ✶ இதன் உச்சியில் அர்ச்சுனன் தபசு செய்யப் பீடம் அமைக்கப்படும்.
- ✶ இரவு ஒன்பது மணியிலிருந்து விடியும் வரை இடம்பெறும்.
- ✶ தீப்பந்த ஒளியமைப்பு காணப்படும்.
- ✶ படம் வரையப்பட வேண்டும்.

**பகுதி - B**

04) 1) லோக தர்மி, நாட்டிய தர்மி.

2) நிருத்த

- ✶ தூய நடனம், தாள நடனம்.
- ✶ தாயம், லயம் என்பவற்றுக்கமைவானது.
- ✶ ஆங்கிக அபிநயம் முக்கியம் பெறும்.
- ✶ தாண்டவம், லாஸ்யம் ஆடல் முறை.

மேலும் பொருத்தமான விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

நிருத்திய

- ✶ தாளம், லயம், பாவம் என்பவற்றுக்கமைவானது.
- ✶ ஆங்கிக, சாத்விக அபிநயம் முதன்மை பெறும்.
- ✶ கண்கள் பாவத்தின் வழியே செல்ல, கால்கள் தாளத்தின் வழியே நடனமாடும்.
- ✶ நிருத்திய நடனத்தில் வீரமணி ஐயரின் தனித்துவம், மேலும் பொருத்தமான விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

நாட்டிய

- ✶ தாளம், லயம், பாவம், கதை இணைந்தது.
- ✶ நால்வகை அபிநயம் செல்வாக்குச் செலுத்தும்.
- ✶ நாடகத்தைக் குறித்து நிற்கிறது.
- ✶ நடிகன் பிரதான மூலமாகக் கொள்ளப்படுகின்றான்.

மேலும் பொருத்தமான விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

3) மார்க்க அரங்கு

- ✶ மார்க்க என்பது சாஸ்திரிய நிலைப்பட்டது.
- ✶ நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் 10 மரபுகளையும் உள்ளடக்கியது.
- ✶ சமூகத்தில் உயர் மட்டத்தினருக்கான அரங்கு ஆகும்.
- ✶ சமஸ்கிருத செந்நெறி நாடக மரபு.
- ✶ இலக்கண விதிமுறைகளுக்கமைய படைக்கப்படுவது.

தேசி அரங்கு

- ✶ தேசி மரபு என்பது தேசங்களுக்கானது.
- ✶ அவ்வச் சுதேச பிராந்தியப் பண்பைப் பிரதிபலிப்பது.
- ✶ பிரதேச தனித்துவங்களை வெளிப்படுத்திக் காட்டும் மரபு. (மதம், மொழி, பண்பாடு, ஒப்பனை)
- ✶ இலக்கண மரபுகள், விதிகளுக்கு அப்பாற்றபட்டது.
- ✶ இந்திய மாநில தனித்துவங்கள் வெளிப்படல்.
  தமிழ்நாடு - தெருக்கூத்து
  கேரளா - கதகளி
  உத்தரப் பிரதேசம் - மணிப்புரி
  ஒரிசா - ஒடிசி

வேறுபாடுகளை எழுதியிருப்பின் 04 புள்ளிகளும், விளக்கியிருப்பின் 03 புள்ளிகளும் வழங்குக.

05) 1) ஸ்ரனிஸ்லவஸ்கி

- ✶ நடிப்பில் முறைமைக் கோட்பாட்டைத் தோற்றுவித்தவர்.
- ✶ மொஸ்கோ கலையரங்கு.
- ✶ உள்ளார்ந்த உளரீதியான நடிப்புக்கு முதன்மையளித்தவர்.
- ✶ பார்ப்போர் நிகழ்வுடன் ஒன்றித்துப் போதல்.
- ✶ பயிற்சிக்கு முதன்மையளித்தல்.
- ✶ பாத்திரமாக வாழுதல்.
- ✶ அளிக்கையில் உண்மைத் தன்மை.

இந்நடிப்புக் கோட்பாடு ஏனைய அரங்குகளில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி விளக்கியிருப்பின் புள்ளி வழங்கலாம். (5 புள்ளி)

2) பேர்ட்டோல்ட் பிறெ:.ட்

- ✶ காவிய அரங்கினை முன்வைத்தார்.
- ✶ பார்ப்போரை மையப்படுத்திய அரங்கு.
- ✶ அந்நியமாதல் / தூரப்படுத்தல் உத்தி.
- ✶ பார்ப்போரைச் சிந்திக்கத் தூண்டுதலை நோக்கமாகக் கொண்ட அரங்கு.
- ✶ நிகழ்த்திக் காட்டல், வரலாறாக்கல்.
- ✶ குறியீட்டுக் காட்சிப் பொருள், குறியிட்டு இசை.
- ✶ அரங்கு என்பது சமூக மாற்றத்திற்கான ஆய்வுகூடக் கருவி ஆகும்.

காவிய அரங்கக் கோட்பாடுகளின் தாக்கம் ஏனைய நவீன அரங்குகளில் செல்வாக்குச் செலுத்தியமை தொடர்பில் விளக்கியிருப்பின் புள்ளி வழங்கலாம். (5 புள்ளி)

3) அகஸ்தாபோல்

- ✶ யதார்த்தம் சாராத அரங்கக் கோட்பாட்டை முன்வைத்தார்.
- ✶ ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கை முன்வைத்தார்.
- ✶ - படிம அரங்கு.
  - கலந்துரையாடல் அரங்கு.
  - திடீர் அரங்கு.
  - கண்ணுக்குப் புலனாகாத அரங்கு.
- ✶ நாடகத்தைப் பிரயோக அரங்க நுட்பங்களுடன் வடிவமைத்தார்.
- ✶ அரங்கில் பார்போரின் பங்கு கொள்ளலை (Spect - Actor) வலியுறுத்தினார்.

அகஸ்தாபோலின் நடிப்புக் கோட்பாடுகள் பின் நவீனத்துவ அரங்கச் செயற்பாடுகளில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி முன் வைத்திருப்பின் புள்ளி வழங்கலாம். (5 புள்ளி)

06) 1) சன்னியகும

- ✶ சன்னியக்கு எனும் பிசாசை ஓட்டகின்ற கரணம்.
- ✶ 18 பிசாசுகளின் வருகை நாடகத் தன்மை பொருந்தியது.
- ✶ வேடப்புனைவு, பாடல், ஆடல், நடிப்பு, சொல்லாடல்.
- ✶ பின்னணி இசை - மத்தளம், குழல்.
- ✶ சிங்கள மக்களின் சடங்கு சார் அளிக்கை வடிவம்.
- ✶ சங்கபால மன்னனுக்கும் அரசிக்கும் பிறந்த அரசகுமாரன் அநியாயமாகத் தனது தாயைக் கொலை செய்த தந்தையைப் பழி வாங்குதலைப் பற்றியது.

2) சொக்கரி

- ✶ சிங்களப் பாரம்பரியக் கிராமிய நாடக வடிவம்.
- ✶ பாயிழைக்கும் கின்னரய என்ற சாதியினர் நிகழ்த்துவர்.
- ✶ குருகாமி சொக்கரியை மணப்பதும் குழந்தை இல்லாது இலங்கைக்கு வருவதும் நாட்டு வைத்தியருடன் தொடர்பு ஏற்பட்டு அவருடன் சென்று பின் கணவருடன் சேர்வதும் ஆகும்.
- ✶ புதுவருடப் பிறப்பையொட்டி நிகழும்.
- ✶ களத்துமேடு அரங்கு.
- ✶ அங்கதச் சுவை கொண்டது.
- ✶ பத்தினித் தெய்வ வழிப்பாட்டுடன் தொடர்புடையது.

3) பாஸ்க்கு

- ✶ கிறிஸ்தவச் சடங்காக நிகழ்த்தப்படும்.
- ✶ கிறிஸ்தவ மக்களின் தவக்கால வழிபாட்டோடு சம்பந்தப்பட்டது.
- ✶ இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய விடயங்களைக் கொண்டிருக்கும்.

மேலும் விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

4) பறைமேளக் கூத்து

- ✶ மட்டக்களப்புக்கே உரித்தான கலை வடிவம்.
- ✶ பறையடிக்கும் சமூகத்தவரால் ஆடப்படும்.
- ✶ பறையர் குலத் தலைவன் மூப்பன்.
- ✶ சொர்ணாளி இசையோடு மலர்வது பறை.
- ✶ ராசா வரவு, கோணங்கி வரவு, பிரதானி வரவு, மந்திரி வரவு போன்ற தாளங்கள் பறைமேளத்தில் தீர்க்கப்படும்.
- ✶ கதையம்சம் இன்றி இருக்கும்.
- ✶ கோயில் முன்றலில் நிகழ்த்தப்படும். மரணச் சடங்கிலும் மாறுபட்ட தாளத்திற்கேற்ப வாசிப்பர்.
- ✶ வேட உடை, ஒப்பனை பற்றிக் குறிப்பிடப்பட வேண்டும்.

($3 \times 5 = 15$ புள்ளிகள்)